# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.11390/C/2024

திரு அ. பெருமாள் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
கதவு எண்.31/1, N.G.O. காலனி 6-வது தெரு,
மேலகரம் அஞ்சல், தென்காசி மாவட்டம் - 627 818. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 15.05.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 20.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 27.06.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 12.08.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு அ. பெருமாள் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி சி.ரா.சங்கீதா, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மு.கூ.பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தென்காசி மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தென்காசி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், முதலமைச்சரின்

தனிப்பிரிவு புகார் மனு எண்.7939323/2024 நாள் 24.04.2024 மற்றும் 16.12.2023 ஆகிய தேதிகளிட்டு தன்னால் அனுப்பப்பட்ட மனு சம்பந்தமான கோப்புகளின் நகல்கள், தனது புகாரில் கூறிய தார் கலவை ஆலையானது 05.04.2024 அன்றைய ஆய்வின்போது இயக்கத்தில் இல்லை என தெரிவித்துள்ளீர்கள் அன்று மட்டும் தான் இயக்கத்தில் இல்லாமல் இருந்ததா அல்லது நிரந்தரமாகவே இயக்கப்படாமல் இருந்ததா என்பது பற்றிய விவரம்,82/1-ல் கூகுள் மேப்படி R.F. வெள்ளக்கல் பரும்பிலிருந்து தார்கலவை ஆலை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையாக தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு கடித எண்.மாசுபொ/திலி/கோ-03(திலி)-2205/2024 நாள் 23.02.2024, கடித எண்.மாசுபொ/தநாமாகவா/தெகா/புகார்-7939323/2024 நாள் 24.04.2024 மற்றும் கடித எண்.மாசுபொ/தநாமாகவா/தென்/கோ-த.அ.உ.ச-07/2024 நாள் 20.06.2024 ஆகிய தேதிகளிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகி அவரது கருத்தினை எடுத்துரைக்கத் தவறியுள்ளார். எனவே, பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.11390/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
கதவு எண்.31/1, N.G.O. காலனி 6-வது தெரு,
மேலகரம் அஞ்சல், தென்காசி மாவட்டம் - 627 818.

**<u>வழக்கு எண்.SA.11390/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு அ. பெருமாள், த/பெ. பெ. அருணாசல நாடார்,
எண்.2/337, தெற்குத்தெரு, அச்சங்குட்டம் (அஞ்சல்),
வீரகேரளம்புதூர் தாலுகா,
தென்காசி மாவட்டம் - 627 861.

Copy to: File
SNPS / 09.04.2026